தொலைநோக்கும் இல்லை! முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இல்லை!

# சிலிண்டர் தட்டுப்பாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசே காரணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, மார்ச். 17–

ஒன்றிய அரசுக்கு தொலைநோக்குப் பார்வையும் இல்லை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இல்லை. சிலிண்டர் தட்டுப்பாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசே காரணம் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில் பதிவிட்டிருப்பதாவது:–

**வெளியுறவுக் கொள்கையிலும் #FailureModel எனப் பெயரெடுத்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான முடிவுகளால் கடுமையான சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.**

**தொலைநோக்கு இல்லை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இல்லை. பொதுமக்களுக்குத்தான் இவர்களால் தொல்லை.**

**இதனைக் கண்டித்து, தமிழ்நாடெங்கும் நமது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். களத்தில் தகிக்கும் மக்களின் கோபத்தை உணர்ந்து, ஒன்றிய அரசு உடனடியாக நிலைமையைச் சீர்செய்திட முன்வர வேண்டும்.**



இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



## மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/நகர/பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச் 17 | காலை 9.00 மணி | நாங்குநேரி | களக்காடு நாங்குனேரி, பாளையங்கோட்டை ஆகிய ஒன்றியங்கள் திருக்குறுங்குடி மூலக்கரைப்பட்டி ஆகிய பேரூர்கள் | அழகு மஹால் செங்குளம் நாங்குநேரி |
| மார்ச் 17 | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | பாளையங்கோட்டை மானூர் ஆகிய ஒன்றியங்கள், சங்கர்நகர், நாராணம்மாள்புரம் ஆகிய பேரூர்கள் | அமோகா பேலஸ் தச்சநல்லூர் பாளையங்கோட்டை |
| | | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை வடக்கு, மேலப்பாளையம் கிழக்கு மேலப்பாளையம் மேற்கு ஆகிய பகுதிகள் | |
| மார்ச் 17 | இரவு 7.00 மணி | அம்பாசமுத்திரம் | சேரன்மாதேவி ஒன்றியம் அம்பாசமுத்திரம் நகரம், கல்லிடைக்குறிச்சி, கோபால சமுத்திரம், சேரமன்மாதேவி, மணிமுத்தாறு, மேலசேவல், விக்கிரமசிங்கபுரம், வீரவநல்லூர் ஆகிய பேரூர்கள் | எஸ்.எல்.எம். மண்டபம் வீரவநல்லூர் அம்பா சமுத்திரம் |

**இவண் – தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன், திருநெல்வேலி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் கிரகாம்பெல், திருநெல்வேலி மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப்.**

உர இறக்குமதியில் சீனாவை நம்பும் இந்தியா ?

# உர உற்பத்தியை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், மார்ச் 17 –

டெல்லியில் நடைபெற்று வரும் மாநிலங்களவை கூட்டத்தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு உர இறக்குமதியின் மீது இந்தியா கொண்டுள்ள சார்பு குறித்து கேள்வி எழுப்பினார்.



ரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சரிடம் அவர் எழுப்பிய கேள்வியில், கடந்த ஐந்து ஆண்டுகளில் குறிப்பாக நீரில் கரையக்கூடிய கலப்பு உரங்கள் மற்றும் யூரியா கரைசல் வகை உரங்களில் சீனாவிலிருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ள அளவு எவ்வளவு என்பது குறித்து ஆண்டு வாரியாகவும், உர வகை வாரியாக வும் விளக்கம் கோரினார்.

மேலும், 2025 அக்டோபரில் சீனா உர ஏற்றுமதியை நிறுத்தியதைத் தொடர்ந்து இந்தியாவில் உர விலை அதிகரிக்கும் வாய்ப்பு குறித்து ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா, அதற்கான கண்டறிதல்கள் என்ன?

அத்துடன், சீனாவுக்கு மாற்றாக பிற நாடுகளிலிருந்து உரங்களை இறக்குமதி செய்வதற்கும், நாட்டின் உள்நாட்டு உர உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்பதையும் விளக்குமாறு கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய ரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் அனுப்ரியா பட்டேல்,

மத்திய உர தரக் கட்டுப்பாடு மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம், உர ஆய்வாளர்கள் பல்வேறு துறை முகங்களில் இறக்குமதி செய்யப்படும் 100 சதவீதம் நீரில் கரையக்கூடிய கலப்பு உரங்கள் மற்றும் 100 சதவீதம் நீரில் கரையக்கூடிய உர கலவைகள் ஆகியவற்றிலிருந்து மாதிரிகளை சேகரித்து ஆய்வு செய்கிறார்கள்.

இந்த நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நீரில் கரையக்கூடிய உரங்களின் விவரங்கள் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளன.

யூரியா உரம் அதன் உற்பத்தி செலவைப் பொருட்படுத்தாமல், அரசு நிர்ணயித்த அதிகபட்ச சில்லறை விலை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

45 கிலோ எடையுள்ள யூரியா மூட்டையின் மானிய விலை ரூ.242 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் வேப்பம் பூச்சு செலவு மற்றும் பொருந்தும் வரிகள் சேர்க்கப்படவில்லை. விவசாய நிலத்திற்கு உரம் கொண்டு செல்லப்படும் மொத்த செலவு மற்றும் உர உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் சந்தையில் பெறும் நிகர வருமானம் ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை இந்திய அரசு மானியமாக வழங்குகிறது.

இதன் காரணமாக அனைத்து விவசாயிளுக்கும் யூரியா உரம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உரங்கள் தொடர்பாக, அரசு 01.04. 2010 முதல் சத்துச் சார்ந்த மானிய கொள்கையை அமல்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உரங்களின் விலை கட்டுப்பாடு நீக்கப்பட்டு, சந்தை நிலையைப் பொறுத்து உர நிறுவனங்கள் நியாயமான அளவில் அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் அந்த விலையை அரசு கண்காணித்து வருகிறது.

50 கிலோ டை அமோனியம் பாஸ்பேட் உர மூட்டையின் விலையை ரூ.1350 அளவில் வைத்திருக்க, சத்துச் சார்ந்த மானியத்திற்கு மேலாக இந்திய அரசு கூடுதல் சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதன்படி ஒரு மெட்ரிக் டனுக்கு ரூ.3500 வழங்கப்படுகிறது. இந்த தொகையில் தொழிற்சாலை வாயிலில் இருந்து விவசாய நிலம் வரை கொண்டு செல்லும் செலவுகள், சர்வதேச சந்தை விலை உயர்வு அல்லது குறைவு காரணமான பாதிப்புகள், அதிகபட்ச சில்லறை விலையில் சேர்க்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி தொகை மற்றும் அந்த வரியை கழித்த பிறகு கிடைக்கும் விலையில் 4 சதவீதம் வரை நியாயமான லாபம் ஆகியவை அடங்கும்.

இந்த ஏற்பாடுகள் 2025 கரீப் பருவத்திற்கும் 2025–26 ரபி பருவத்திற்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து கிடைக்கும் டை அமோனியம் பாஸ்பேட் உரங்களுக்கு பொருந்தும் வகையில் அமல்படுத்தப்பட்டுள்ளன.

உர இறக்குமதி மூலங்களை பல்வேறு நாடுகளுக்கு விரிவுபடுத்தவும், உர மூலப்பொருட்களின் நம்பகமான விநியோகத்தை உறுதி செய்யவும், வளம் நிறைந்த நாடுகளில் உள்ள வழங்குநர்களுடன் இந்திய நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் பிற ஒப்பந்தங்களை மேற்கொள்ள அரசு வசதி செய்து வருகிறது.

மேலும், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உரங்களின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

(1) கோரிக்கைகளின் அடிப்படையில், புதிய உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கும் அல்லது ஏற்கனவே உள்ள உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் சத்துச் சார்ந்த மானிய திட்டத்தின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(2) இந்த சத்துச் சார்ந்த மானிய கொள்கையின் கீழ் உள்ள பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உர வகைகள் 2021ஆம் ஆண்டில் 22 வகைகளாக இருந்தது; தற்போது அது 28 வகைகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

(3) உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஒற்றை சூப்பர் பாஸ்பேட் உர பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், மண்ணுக்கு பாஸ்பரஸ் சத்து வழங்குவதற்காக 2022 கரீப் பருவம் முதல் இந்த உரத்திற்கு போக்குவரத்து மானியம் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளின் விளைவாக டை அமோனியம் பாஸ்பேட் மற்றும் ஒற்றை சூப்பர் பாஸ்பேட் உட்பட பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உரங்களின் உற்பத்தி 2014–15ஆம் ஆண்டில் 159.54 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது; அது 2024–25ஆம் ஆண்டில் 211.22 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

யூரியா தொடர்பாக, யூரியா துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவித்து இந்தியாவை தன்னிறைவு அடையச் செய்வதற்காக அரசு புதிய முதலீட்டு கொள்கையை 2 ஜனவரி 2013 அன்று அறிவித்தது. பின்னர் 7 அக்டோபர் 2014 அன்று அதில் திருத்தம் செய்யப்பட்டது. இந்த கொள்கையின் கீழ் மொத்தம் 6 புதிய யூரியா உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 4 நிலையங்கள் அரசுத் துறை நிறுவனங்கள் இணைந்து அமைத்த கூட்டு நிறுவனங்கள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன; மேலும் 2 நிலையங்கள் தனியார் நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ளன.

அரசுத் துறை கூட்டு நிறுவனங்கள் அமைத்த நிலையங்கள்:

தெலங்கானா மாநிலத்தில் ராமகுண்டம் உர மற்றும் இரசாயன நிறுவனம் அமைத்த ராமகுண்டம் யூரியா ஆலை இந்துஸ்தான் உர மற்றும் இரசாயன நிறுவனம் அமைத்த கோரக்பூர் (உத்தரப்பிரதேசம்) சிந்த்ரி (ஜார்கண்ட்)

பரௌனி (பீகார்) ஆகிய யூரியா ஆலைகள். தனியார் நிறுவனங்கள் அமைத்த நிலையங்கள்: மேற்கு வங்காளத்தில் பானாகர் யூரியா ஆலை ராஜஸ்தானில் கதேபன் – III யூரியா ஆலை.

இந்த ஒவ்வொரு ஆலைக்கும் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி திறன் உள்ளது. இவை சமீபத்திய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதால் அதிக எரிசக்தி திறன் கொண்டதாக உள்ளன. இதன் மூலம் மொத்தமாக 76.2 லட்சம் மெட்ரிக் டன் யூரியா உற்பத்தி திறன் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் உள்நாட்டு யூரியா உற்பத்தி திறன் 2014–15ஆம் ஆண்டில் 207.54 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 2023–24ஆம் ஆண்டில் 283.74 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

மேலும், ஒடிசா மாநிலத்தில் உள்ள தல்சர் உர ஆலையை மீண்டும் செயல்படுத்த அரசுத் துறை நிறுவனங்கள் இணைந்து உருவாக்கிய தல்சர் உர நிறுவனம் மூலம் கல்லை வாயுவாக்கும் முறையில் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட புதிய யூரியா ஆலையை அமைக்கும் திட்டத்துக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், அசாம் மாநிலம் நாம்ருப் பகுதியில் உள்ள பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உர நிறுவனம் வளாகத்தில் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட புதிய அமோனியா–யூரியா உற்பத்தி வளாகத்தை அமைக்கும் திட்டத்தையும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிறுவனம் அசாம் பள்ளத்தாக்கு உர மற்றும் இரசாயன நிறுவனம் என்ற பெயரில் செயல்படும்.

இதற்குடன், 25 மே 2015 அன்று அரசு புதிய யூரியா கொள்கையையும் அறிவித்தது. இது நாட்டில் உள்ள 25 எரிவாயு அடிப்படையிலான யூரியா ஆலைகளுக்கு பொருந்தும். இந்த கொள்கையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று உள்நாட்டு யூரியா உற்பத்தியை அதிகபட்சமாக உயர்த்துவதாகும்.

இந்த கொள்கையின் மூலம் 2014–15ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆண்டுதோறும் கூடுதலாக 20 முதல் 25 லட்சம் மெட்ரிக் டன் வரை யூரியா உற்பத்தி அதிகரித்துள்ளது.

இந்த அனைத்து நடவடிக்கைகளின் விளைவாக, நாட்டில் யூரியா உற்பத்தி 2014–15ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 225 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது; அது 2023–24ஆம் ஆண்டில் 314.07 லட்சம் மெட்ரிக் டன் என்ற சாதனை அளவுக்கு உயர்ந்துள்ளது.

2024–25ஆம் ஆண்டில் நாட்டில் 306.67 லட்சம் மெட்ரிக் டன் யூரியா உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் அனுப்ரியா பட்டேல், பதிலளித்தார்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட 17 வது வார்டு புதுப்பேட்டை இஸ்லாமிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கிட்டா முஸ்தபா தெரு மற்றும் லீபஜார் காதர்பேட்டை வரை இணைப்பு பாலம் ரூ. 70 லட்சம் மதிப்பில் கட்டிமுடிக்கப்பட்ட தரை பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்காக நகர மன்ற தலைவர் நிர்மலா பபிதா திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர்கள் கே.பாலசுப்பிரமணியம், ஏ.ஜி.ராமச்சந்திரன், ஆணையாளர் சையது முஸ்தபா கமால், தி.மு.க. நிர்வாகிகள் பர்கத் அலி , லேசர் அலி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தரமான கல்வியை அளிக்க , ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க

# நிதி நிலை அறிக்கையில், ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 17–

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ்.ஆர். சிவலிங்கம் 11 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், தரமான கல்வியை அளிக்கவும், ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மாணவர்களின் இடைநிலை கற்றலை குறைக்கவும் தேவையான நடவடிக்கைகளுக்கு நிதிநிலை அறிக்கையில், ஒன்றிய அரசு போதுமான நிதியுதவி அளித்துள்ளதா? என்றும், அனைத்து மாநிலங்களுக்குமான சமச்சீர் நிலை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? என்றும், அதன் விவரங்களை மேலவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் ஜெயந்த சௌத்ரியிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

அரசியல் சாசனத்தின்படி கல்வி பொதுப்பட்டியலில் உள்ளதால், ஒன்றிய அரசும் மாநில அரசும் இணைந்து கல்வி வளர்ச்சிக்கு பாடுபடுகின்றன என்றும், கடந்த 202627ஆம் நிதி ஆண்டிற்கு ரூபாய் 1,39,289 கோடிகள் நிதி ஒதுக்கீடு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது என்றும், கற்றல் திறனை அதிகரிக்கவும், கணிணி சார்ந்த கட்டமைப்புகளை பெருக்கவும், ஆசிரியர்களின் பயிற்சிக்காகவும் சுமக்ரா சிக்ஷா திட்டத்தின் மூலம் வெவ்வேறு மாநிலங்களுக்கு நிதியுதவியை ஒன்றிய அரசு வழங்கி வருகிறது என்றும் இதன்மூலம் மாணவர்கள் ஆசிரியர் விகிதம் உயர்ந்து வருகிறது என்றும், பள்ளிக் கல்வித் துறையில் செயல்பாடுகள் அனைத்தும் திட்டக்குழுவினரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், வித்யா சுமக்ஷா கேந்திரா திட்டத்தின் மூலம் மாணவர்களின் இடைநிற்றலைக் குறைக்கவும், பள்ளிகளில் மாணவர்கள் சேரும் விகிதத்தை அதிகரிக்கவும், கணிணி சார்ந்த கட்டமைப்புகளை அதிகரிக்கவும் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தேசிய கல்விக் கொள்கை 2020ன் இலக்குகளை நிறைவேற்ற தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறினார்.

சுமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கும் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு ஆறாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கும், பட்டியிலின மாணவர்கள், மற்றும் பழங்குடியினருக்கும் தேவையான சிறப்பு தேவைகளை நிறைவேற்ற உரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இலவச புத்தகங்கள், இலவச சீருடைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் வருடத்திற்கு 12000 ரூபாய் ஒவ்வொரு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும் எஸ். ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

# தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு தொடர்ந்து குரல் கொடுப்பவர் நமது முதல்வர் மட்டுமே!

## கடத்தூரில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் – முனைவர்.பி.பழனியப்பன் பேச்சு!

தருமபுரி, மார்ச் 17––

தருமபுரி மேற்கு மாவட்டம் கடத்தூர் பேருந்து நிலையம் அருகில் தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பி.ஜே.பி. அரசையும்,அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து தருமபுரி தி.மு.க. மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்பாட்டத்தில் பேசிய தி.மு.க. மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் : ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய 3 ஆயிரத்து154 கோடி கல்வி நிதியை தரவில்லை,100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் ஏரி வேலை செய்யும் பெண்களுக்கு தரவேண்டிய 2 ஆயிரம் கோடி ரூபாயும் தரவில்லை, ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் தர வேண்டிய 3 ஆயிரத்தி 114 கோடி ரூபாயும் தரவில்லை இப்படி ஒன்றிய பா.ஜ.க. அரசு ஓரவஞ்சனை செய்து வருகிறது,அவர்களுக்கு தமிழ்நாடு என்றாலே பிடிப்பதில்லை ஏனென்றால் இந்த மண்ணில் பா.ஜ.க.விற்கு இடமில்லை என்பது அவர்களுக்கு தெரிந்து தான் தமிழ்நாட்டை வஞ்சித்து வருகின்றனர். அதற்கு ஒத்து ஊதி வரும் பாதம் தாங்கி பழனிசாமியும், மற்ற என்.டி.ஏ. கூட்டணியினரையும் கண்டித்தே நாடெங்கும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.மோடியின் வெளியுறவு கொள்கை படுதோல்வி அடைந்துள்ளது என்பதற்கான சான்று தான் இந்த சமையல் எரிவாயு தட்டுப்பாடு.

தமிழ்நாட்டின் உரிமைக்கும், வளர்ச்சிக்கும் என்றும் போராடும் நமது கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சி தொடர வேண்டும் தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு தொடர்ந்து குரல் கொடுக்க கூடிய ஒரே தலைவர் நமது கழகத் தலைவர் மட்டுமே எனவே,தேசிய முற்போக்குக் கூட்டணி வரவிருக்கும் தேர்தலில் மகத்தான வெற்றியை பெற்று தொடர்ந்து கழகம் ஆட்சி அமைக்க நீங்கள் ஆதரவினை அளித்து என்.டி.ஏ. கூட்டணியை படுதோல்வி அடைய செய்யவேண்டும் என்று பேசினார்.


ஆர்ப்பாட்டத்தில் மாநில ஆதி திராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் கொ.ரமேஷ், ஒன்றியச் செயலாளர் சிவப்பிரகாசம், மோகன், வடிவேல்,முனிராஜ் உள்ளிட்ட தி.மு.க.வினர் மற்றும் திராவிடர் கழகம்,வி.சி.க,தே.மு.தி.க., காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினர் திரளாக கலந்து கொண்டு மக்கள் விரோதப்போக்கைக் கடைப்பிடிக்கும் மோடி அரசைச் கண்டித்து பதாகைகளை ஏந்தி, கோஷங்கள் எழுப்பினர்.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திலீப் அழகிரி

### மார்ச் 17 (2013)



**திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவரான பட்டுக்கோட்டை அழகிரியின் புதல்வரான இவர், தி.மு.க.வின் துவக்கக் கால உறுப்பினர்.**

**1965ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை தண்டனை பெற்றவர்.**

**பத்திரிகையாளராகவும், மொழிப்போர் தியாகிகள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தோடு, கழகப் பணியும் – சமுதாயப் பணியும் திறம்பட ஆற்றி ஏழை, எளிய மக்களுக்கு அருந்தொண்டாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**